விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: ஆறு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (17.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து



★ விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள்

★ பீரங்கிக் கப்பல்களின் ரோந்துகள்

★ ஆளில்லா வேவு விமானங்கள்

# பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய படைகள் காத்திருப்பு

(சென்னை)

இலங்கை அரசுக்கு உதவும் வகையில் இந்திய மத்திய அரசு பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையுடன் இணைந்து ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வரும் அதேசமயம், தமிழ் நாட்டுக் கரையோரங்களில் புதிய விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளையும் பொருத்தி வருவதாகக் கூறப்படுகின்றது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் இனங்காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த 13 ஆம் திகதி கொடிகாமம் மந்துவிலில் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மூன்று சடலங்களில் இரண்டாவது சடலமும் நேற்று முன்தினம் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

குறித்த சடலம் மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான சிவஞானமூர்த்தி (06 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் வெளியேற்றத்திற்கு உயர்நிலையுத்தரவே காரணம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு அரசாங்கத்தில் உயர் பொறுப்பில் உள்ளோர் பிறப்பித்த உத்தரவே காரணம் என்று யாழ்.நாகதீப விகாரையின் பிரமனவத்த சிவாலி தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் தமிழர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா - மன்னாரில் படைநகர்வுக்கு முஸ்தீபு

### ஆளணி, ஆயுதம் குவிப்பு

வவுனியா - மன்னார் முன்னரங்க நிலைகளிலிருந்து மற்றொரு மட்டுப்படுத்தப்பட்ட படை நகர்வுக்கு படைகள் தயாராகி வருவதாகவும் இதன் ஒரு அங்கமாக வவுனியா - மன்னார் முன்னரங்க நிலைகளுக்கு ஆளணி மற்றும் இராணுவத் தளபாடங்கள் நகர்த்தப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் உத்தரவின் பேரில் புதிதாக அமைக்கப்பட்ட 57-வது படைப் பிரிவுக்கே மேலதிக படையினரும் படைக்கல உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று 56-வது படையினரின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுளா டஜஸ் நியமிக்கப்பட்டது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ந-5)

## யாழ்ப்பாண வான்பரப்பில் வட்டமிட்ட கிபீர் விமானங்கள் குண்டு வீச்சு

நாகர்கோவில் மற்றும் பளைப் பகுதியை நோக்கி அரச விமானப்படைக்குச் சொந்தமான கிபீர் விமானங்கள் நேற்று நண்பகல் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. குறித்த பகுதிகளில் தாக்குதல் நடத்திய கிபீர் விமானங்கள் இரண்டு யாழ்ப்பாண வான் பரப்பில் வட்டமிட்டதால் மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு முதல் பலாலி, கோப்பாய், யாழ்.கோட்டை ஆகிய இடங்களிலிருந்து இராணுவத்தினரால் ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணை வீச்சுக்கள் நாகர்கோவில் மற்றும் முகமாலை முன்னரங்குப் பகுதிகளை நோக்கி இடம்பெற்ற வண்ணம் இருந்தன.

நாகர்கோவில் மற்றும் முகமாலை முன்னரங்குப் பகுதியிலிருந்து ஊடுருவ முயன்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவரைத் தாம் சுட்டுக்கொன்றதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ந-3)





# கோத்தபாயவின் பயணத்திற்கு தடைவிதிக்க உலகநாடுகள் முடிவு?

## அமெ.பிரஜையான அவருக்கு அந் நாட்டிலும் சட்ட நடவழிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பல அரச அதிகாரிகள் மீது அனைத்துலக சமூகம் பயணத் தடையைக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றியது; நாட்டில் அதிகரித்துள்ள கடத்தல்கள் போன்றவற்றை மனித உரிமை மீறல்கள்என மேற்குலக நாடுகள் கூறிவருவதனால் அந் நாட்டு அனைத்துலக விமான நிலையங்களில் கோத்தபாய ராஜபக்ஷாவுக்கான அனுமதி மறுக்கப்படலாம் எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நுழைவு அனுமதி தேவைப்படும்போது அதனை வழங்குவதற்கு தமது நாடுகள் விரும்பப் போவதில்லை என கொழும்பிலுள்ள மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவின் குடியுரிமையை வைத்திருப்பதால் அவருக்கு உலகின் சில பகுதிகளுக்குச் செல்வதற்கு நுழைவு அனுமதி தேவையற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் தமது (06 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு வவுனியா, மன்னாரில் தற்காலிக நியமனம்

### கடிதங்கள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு வவுனியா மற்றும் மன்னார் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்காலிக நியமனம் வழங்குமாறு வடக்கு மாகாணப் பதில் ஆளுநர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி ஏ–9 பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து வெளிமாவட்டங்களில் பணியாற்றும், (06 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் சேவை நேர்முகப் பரீட்சைக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு

### தடையுத்தரவு வழங்குமாறும் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவைக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறு வெட்டுப் புள்ளி முடிபுகள் விண்ணப்பதாரிகளுக்குத் தனித்தனியாக அறிவிக்கப்படாத நிலையில் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாட்டை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஸ்டான்லி ஜோஸப் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து தடையுத்தரவைக் கோரியுள்ளார்.

அவர் அம் முறைப்பாட்டில், பொதுவாக போட்டிப் பரீட்சைகள் (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐரோப்பிய நாடுகள் இலங்கையை இரண்டாக பிரிக்க முற்படுகின்றன

## திவயின ஆசிரியர் தலையங்கம்

கொழும்பு வெள்ளவத்தை மற்றும் அதனையண்டிய பகுதிகளில் தேவையின்றி சுமார் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையான வட-கிழக்கு தமிழர்கள் தங்கியுள்ளனர். இவர்கள் எதற்காக கொழும்பில் தங்கியிருக்கின்றனர் என்பது தொடர்பான சரியான தகவல்கள் வெளிவரவில்லை.

ஒரு சிலர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக கொழும்பில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் ஏனையோர் காரணம் இன்றியும் தங்கியுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் பொலிஸார் வட-கிழக்கு வாழ் தமிழர்கள் சுமார் 300பேரை பஸ் வண்டி மூலம் அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். இவ்வாறு பஸ் வண்டியினுள் கொண்டு செல்லப்பட்டவர்கள் தொடர்பான செய்தி சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன.

முக்கிய சர்வதேச நாடுகள் சில இவற்றுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அத்தோடு இது மனித உரிமை மீறல் என்றும் சர்வதேச முக்கிய பிரமுகர்கள் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

அன்று விடுதலைப்புலிகளால் மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்டிருந்தது. இதை யார் மூடினார்கள் என்பதை சர்வதேச சமூகம் கருத்திற் கொள்ளவில்லை. அன்று அணைக்கட்டு மூடப்பட்டபோது அப் பகுதியில் வாழும் அப்பாவி மக்களே பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இவர்களைப் பற்றி சர்வதேச சமூகம் யோசிக்கவில்லை.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸி. செய்தி சேவைக்கு வழங்கிய பேட்டியில் இலங்கை ஒரு போதும் பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருக்க வேண்டி அவசியம் இல்லை. தமக்கு என்றும் சார்க் நாடுகள் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்த கருத்துத் தொடர்பாக சர்வதேச சமூகம் அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் புலிகளுக்கு எதிராக எந்த ஒரு கருத்தையும் சொல்லவில்லை. அவரிடம் இலங்கை அரசு நாட்டு நிலைமை தொடர்பாக எடுத்துக்கூறிய போதும் அவர் அதை கருத்திற் கொள்ளவில்லை.

புலிகள் இயக்கம் இன்று ஐ.நா.சபைக்குள் ஊடுருவியுள்ளது. பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கையை இரண்டாகப் பிரிக்க முற்படுகின்றனர். இதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் உலகையே இரண்டாகப் பிரிக்க பிரித்தானியரும் ஐரோப்பியர்களும் காரண கர்த்தாக்களாக இருந்தனர்.

அவர்களே இன்று எமது நாட்டையும் இரண்டாகப் பிரிக்க முயல்கின்றனர். பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இன்று மற்றைய நாடுகளை அழிக்கவுள்ளனர். அவ்வாறே இந் நாடுகள் இன்று ஆபிரிக்க நாடுகளையும் தம் வசப்படுத்திக் கொண்டுள்ளன.

இவர்கள் ஆபிரிக்க நாடுகளை கைப்பற்றுவதற்கான காரணம் அந் நாட்டு இயற்கை வளங்களான தங்கம் மற்றும் ஏனைய பொருட்களை பெற்றுக் கொள்வதற்காகவே. மேலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக வேண்டி நோர்வே நாட்டில் இருந்து அடிக்கடி எமது நாட்டுக்கு வந்து போகும் பிரதிநிதிகள் இலங்கையை இரண்டாகப் பிரிக்கவே முற்படுகின்றனர்.

அதாவது ஈழம், இலங்கை என்று பிரித்து விட விரும்புகின்றனர். இவ்வாறு சுய நலத்துடன் செயற்படும் சர்வதேசம் நமக்கு எதற்கு? அமெரிக்கா ஈராக்கை கைப்பற்றி அங்குள்ள எண்ணெய் வளங்களை அபகரித்துச் சென்று அதில் கிடைக்கும் வருமானத்தை யுத்தத்திற்குப் பயன்படுத்துகின்றது.

அவ்வாறான ஒரு நிலைமை இலங்கைக்கு ஏற்படக்கூடாது என்பதே எமது இலக்கு. இவற்றை அனைவரும் கருத்திற் கொண்டு கூடிய விரைவில் ஒரு சுமுகமான தீர்வை எதிர்பார்த்துள்ளனர். (ந-5)



இந்திய கலாசார நிலையம் யாழ்.பொது நூலகம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 9.27 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது. இந் நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் ஆலோக் பிரசாத் ஒரு தொகுதி நூல்களை யாழ்.மாநகர சபை ஆணையாளர் எம்.எஸ். சரவணபவவிடமும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி டாக்டர் கே.சிவபாலனிடமும் வழங்குவதையும் அருகில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.மாவை சேனாதிராசா நிற்பதனையும் படங்களில் காணலாம்.

## இலங்கைக்கு இராணுவ உதவியை இந்தியா வழங்கக்கூடாது

### புதுச்சேரி மாநிலத்தில் ஆர்ப்பாட்டம்

இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதை இந்திய மத்திய அரசு நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இலங்கை அரசுக்கு இந்தியா நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆயுத உதவி அளிக்கக்கூடாது. கிழக்குப் பாகிஸ்தானில் வங்காளிகள் தாக்கப்பட்டபோது அவர்களை இந்திய அரசாங்கம் காப்பாற்றியது.

அது போன்று இலங்கைத் தமிழர்களையும் மத்திய அரசு காப்பாற்ற வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்துள்ளனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உட்பட பல அமைப்புக்கள் கலந்து கொண்டன. (ந-3)

## 58ஆவது படையணியை உருவாக்க முயற்சி

(கொழும்பு)

தற்போது புதிதாக சேர்க்கப்பட்டு வரும் ஆட்களைக் கொண்டு மேலும் ஒரு புதிய படையணியை உருவாக்கும் முயற்சியில் இராணுவம் முனைப்பாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது; புதிய படையணியை உருவாக்குவதற்கான இறுதியான வரைபுகள் பாதுகாப்பு அமைச்சினாலும் படை உயர் அதிகாரிகளினாலும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்ட பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதம பாதுகாப்பு அதிகாரி டொனால்ட் பெரேரா இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் இது தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதுடன் அதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர்.

பல பட்டாலியன் துருப்புக்களை உள்ளடக்கிய இந்தப் படையணிக்கு 58ஆவது படையணி எனப் பெயரிடப்படுவதுடன் அதன் கட்டளைத் தளபதியாக மூத்த பிரிகேடியர் ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

இந்த படையணி சிறப்புப் பயிற்சி பெற்ற படையினரைக் கொண்டிருப்பதுடன் மோதல்கள் நடைபெறும் பகுதிகளிலும் அது களமிறக்கப்படும். தற்போது இராணுவம் படையில் ஆட்களை சேர்க்கும் நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இணுவில், மருதனார்மடம் நேற்று சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை முதல் மருதனார்மடம் மற்றும் இணுவில் கிழக்குப் பகுதிகள் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. அதிகாலை 5 மணியளவில் பல நூற்றுக் கணக்காக இராணுவத்தினர் இந்தப் பகுதிகளில் கொண்டு வந்து [illegible] வீடு வீடாக தேடுதல் இடம் பெற்றது.

வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டில் உள்ளவர்களை மருதானர்மடம் இராமநாதன் கல்லூரிக்குச் செல்லும்படி பணித்தனர் அங்கு முகத்தை மூடிக்கட்டியவர்கள் முன் நிறுத்திய பின்னர் நண்பகல் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். (ந-5)

## அடுத்த மூன்று மாதங்களுக்குள் மேலும் 10 ஆயிரம் ஆசிரியர் நியமனம்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த்

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் மேலும் பத்து ஆயிரம் ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கை ஆசிரிய சேவையில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுடன் மொத்தமாக 2 இலட்சத்து 20 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர்.

9 ஆயிரத்து 765 பாடசாலைகளில் 2 இலட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்கள் தற்போது கடமை யாற்றுகின்றனர். நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஆயிரத்து 507 பட்டதாரிகளும் மாகாணப் பாடசாலைகளில் 6 ஆயிரம் பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்குவதற்கு பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சை நடாத்தி நியமனம் வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ந-5)

## ஐ.நா.முன்னாள் செயலர் வால்டெயிம் காலமானார்

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் ஜோஸெப் வால்டெயிம் தனது 88 ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார். ஆஸ்திரிய நாட்டவரான இவர் 1972 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைப் பொறுப்பை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1986 ஆம் ஆண்டில் இவர் ஆஸ்திரியாவின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். ஜேர்மன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு உடந்தையாக இருந்ததாக இவர் மீது பாரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இந் நிலையில் வால்டெயிம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை பல ஆஸ்திரியர்கள் நம்பத் தயாராக இருக்கவில்லை. எனினும் அமெரிக்கா உள்ளடங்கலாக பல நாடுகள் வால்டெயிமின் பிரவேசத்திற்கு தடை விதித்திருந்தன.

அமெரிக்காவின் இத் தடை இதுவரை நீக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமாக இருந்த காலகட்டத்தில் ஈரானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க பணயக் கைதிகளை விடுவிக்க அங்கு சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## சந்திரிகாவின் மகளுக்கு லண்டனில் திருமணம்

(லண்டன்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மகள் யசோதராவின் திருமணம் நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது.

இத் திருமணத்தில் சந்திரிகாவின் சகோதரர் அநுரா பண்டாரநாயக்க ,சகோதரி சுனித்ரா ,வர்த்தகர்கள் ஹரி ஜெயவர்த்தன, ரஞ்சன் இமோ , முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் மட்டும் இலங்கையிலிருந்து கலந்து கொண்டனர்.

சந்திரிகா ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது பொறுப்புக்களில் இருந்த பிற நாடு களின் தலைவர்கள் மற்றும் யசோதராவின் கணவர் ரோகர் வால்கரின் உறவினர்களும் திருமணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (ந-5)

## நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தினரின் ஏற்பாட்டில் தவசிக்குளம் கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தையொட்டி பத்துத்தினங்களும் ஆன்மீக சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று 4 ஆவது நாள் உற்சவத்தில் 'மஹோற்சவம் உணர்த்தும் தத்துவம்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்தசத்தியதாஸன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

நாளை 5 ஆம் நாள் 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ந-5)

## புற்றளை ம.வி. மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(யாழ்ப்பாணம்)

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தின் லண்டன் பழைய மாணவர் சங்கம் மேற்படி வித்தியாலய வறிய மாணவர்கள் 124 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியாக கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை அதிபர் அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார்.

இவ் வைபவத்தில் 1916 ஆம் ஆண்டு தொடக்கம் அதிபர்களாக இருந்து வந்தவர்களின் புகைப்படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. (ந-35)

விற்பனைக்கு

40 அடி சொக்கட்டான் பந்தல், 40 அடி தகரப் பந்தல், முத்து மணவறை, பிளாஸ்ரிக் கதிரைகள், ரெலிபோன் பூத், இரும்புக் கதிரைகள், சமையல் பாத்திரங்கள் என்பன விற்பனைக் குண்டு.

தொடர்பு:- 222 2193 (125)

# எண்சோதிடம்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

உடனே பலன்களும் கிடைத்தன. செல்வ நிலையில் முன்னேற்றமடைந்தால் தான் ஒருவனை அவன் குடும்பத்தார்கள கூட மதிக்கிறார்கள் . மற்ற முன்னேற்றங்களை ஒருவரும் புரிந்துகொள்வதில்லை . மெத்தப்படித்தவர்கள் கூட பெயர் மாற்றினால் உடனே அதிர்ஷ்டமடிக்கும் என்ற கூற்றை (என் தகப்பனார் கூட... முழுவதும் நம்பவில்லை. தனக்கு நோய் ஆபரேஷன் தான் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டது.

சில நாட்கள் கையெழுத்திட்டதும் பூரணமாக குணமடைந்த பின்னரே நான் யோக்யன்தான் என்று பூரணமாக நம்பினார்) சுலபமாக நம்பவில்லை. புதுக் கோட்டையில் நோயுற்றிருந்த ஒரு வக்கீல் பெயரை 42 எண்ணிலிருந்து 46க்கு மாற்றி ஒரு மாதத்தில் ஜட்ஜ் ஆவார் என்று சொன்னதை அநேக வக்கீல்கள் பரிகாசமாகவே பேசி வந்தனர்.

எதிர்பாராத ஒரு நெருக்கடியால் நான் சொன்னபடியே யாருமே எதிர்பாக்க முடியாதவகையில் அவர் விசேஷ ஜட்ஜ் ஆக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு யாரும் இதை நகைப்பிற்குரிய விஷயமாகக் கருதவில்லை.

செட்டி நாட்டின் எல்லா பிரமுகர்களும் அன்றே பூரணமாக ஒத்துக் கொண்டார்கள் .1951இல் இலங்கைக்கு வரும்படி என் அன்பர்களான (என்னால் பதவியுயர்வடைந்த) சில ஜட்ஜ்கள் அழைப்பிற்கிணங்கி சென்றேன். கொழும்பில் நான் அச்சமயம் உள்துறை மந்திரியின் செகரட்டரியாக இருந்த ஸ்ரீமான் வைரமுத்துவின் வீட்டில் தங்கியிருந்தேன் . அவர் என்னை ஜட்ஜ்கள் அழைப்பித்த ததன் நோக்கம் அப்பொழுது 3வது ஸ்தானத்திலிருந்து ஜஸ்டிஸ் நாகலிங்கம் பிரதம ஜஸ்டிஸ்ஆக முடியுமா என்பதற்காகத்தான் என்னை அழைத் துள்ளார்.

அவர் ஒருக்காலும் அப் பதவியை அடையமுடியாது. அவருக்கு மேல் உள்ளவர்கள் 5 வருஷம், 7 வருஷம் பதவிக்காலம் உள்ளவர் இருவருக்கு 4 1/2 ஆண்டுகளே பதவிக்காலம் . இது சாதரணமான விஷயமல்ல . அவர் கேட்டால் வரம் கொடுப்பது போல் எதையாவது சொல்லி மாட்டிக் கொள்ளாதீர்கள் என திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்.

என்னைக் கேட்டால் என்னால் முடிந்ததை செய்வேன் என்று சொன்னேன் . அதேபோல் ஜஸ்டிஸ் நாகலிங்கம் அவர்களும் எனக்கு இதைச் செய்தால் ஒரு தமிழ் மகன் இந்தப் பதவியை வகித்த பெருமை இலங்கைத் தமிழினத்திற்கே உண்டாகுமென்றார் . அவரை சில நாட்கள் லீவு எடுத்துவிட்டு குறிப்பிட்ட திகதியில் பதவியில் சேர்ந்ததால் சீக்கிரமே இலங்கையிலேயே பெரிய பதவியை அடைவீர் என எழுதிக் கொடுத்தேன். ஒரே மாதத்தில் பிரதம நீதிபதி காமன்வெல்த் நீதிபதிகள் மகா நாட்டிற்காக ஆஸ்திரேலியா போக அதற்கிடையில் இரண்டாவது பதவியிலிருந்தவர் வயிறு ஆபரேஷன் செய்து ஆஸ்பத்திரியில் இருக் க ஸ்ரீமான் நாகலிங்கம் பிரதம நீதிபதியாக செயல்பட்டார். கவர்னர் ஜெனரல் லண்டனிலிருந்து அவசரமாக அழைக்கப் பட்டதால் நம்மவர் கவர்னர் ஜனரலாக் இருமுறை ஆனார்.

பார்லிமெண்ட் மேல் சபை மெம்பர்கள் சங்கத்தில் நான் சொற்பொழி வாற்றியபோது அடுத்து வரும் பிரதம மந்திரிகளுக்கும் நாயக்கா என்ற பெயருடையவர்களாக் இருப்பார்கள் என்றேன்.

இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்த தஹநாயக்கா என்பவர் எழுந்து பண்டிட் அவர்களே என் பெயரும் தஹநாயக்காதான் என்னையும் அருள்பாலியும் என்றார்.

எல்லோரும் கைகொட்டி சிரித்தனர். (ஏனெனில் அவர் ஒரு சுயேச்சை –தன் ஓட்டு ஒன்றுதான் உள்ளவர்) நான், நீரும் சிறிது காலம் இலங்கையின் பிரதம மந்திரியாக இருப்பீர் என்றேன். எல்லோரும் இதை தமாஷ் என நினைதனர். கூட்டம் முடிந்ததும் இப்பொழுது மந்திரியாக உள்ள தொண்டமான் அவர்கள் என்னிடம் வருத்தப்பட்டார். சிறு பிள்ளைத்தனமாக நீர் இப்படி சொல்லலாமா? எனக்குக் கூட இந்திய காங்கிரஸ் ஓட்டு கிடைக்கும். ஜனநாயகத்தில் சுயேச்சை எப்படி ஐயா பிரதமராக முடியும் என்று சொன்னார். அதற்கு நான் தொண்டமான் அவர்களே நான் சொன்னபடி அவர் நிச்சயம் பிரதமராவார் . இன்றிலிருந்து அவரை சிநேகிதனாக்கிக் கொள்ளும் என்றேன்.

**பண்டிட் ஸேதுராமன்**

ஸ்ரீமான் பண்டார நாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டதும் கட்சிச் சார்பில் லாத ஒருவரையே விசாரணை முடியும் வரை நியமிக்க வேண்டுமென நினைத்து பிரிட்டிஷ் ராஜாங்கம் ஸ்ரீமான் தஹநாயக் காவை பிரதம மந்திரியாக்கியது. டைம்ஸ் பத்திரிகை முதல் பக்கத்தில் இந்தியாவிலிருந்து வந்து போன பண்டிட் அவர்களைத் தவிர இலங்கையில் எவரும் ஸ்ரீ தஹநாயக்கா பிரதமராவார் எனக் கனவிலும் நினைக்க வில்லை என்று எழுதியது.

(தொடரும்)

## தமிழ் மக்களை கொழும்பிலிருந்து வெளியேற்றினால் வீதியில் இறங்கிப் போராடுவோம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பில் உள்ள தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கு மீண்டும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும். அவ்வாறான முயற்சியை தோற்கடிக்க ஐ.தே.க. தன்னாலான அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும். தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கிப் போராடவும்எமது கட்சிதயாராக இருக்கின்றது. அரசியலமைப்பை மீறுவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசியலமைப்பின் பிரகாரமே இந்த நாடு நிர்வகிக்கப்பட வேண்டும். அதனை மீறுவதற்கு அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. அந்த வகையில் இந்த நாட்டின் மக்கள் எப்பகுதியிலும் வாழும் உரிமையை அரசியலமைப்பு உறுதிப் படுத்துகின்றது.


இதனை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அரசியலமைப்பை மீறியே அரசாங்கம் அண்மையில் தமிழ் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்றும் மிலேச்சத்தனமான செயற்பாட்டை மேற் கொண்டது.

தற்போதைய நிலைமையில் தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரசாங்க அமைச்சர்களின் கூற்றுக்களைப் பார்க்கும் போது தமிழர்கள் மீண்டும் கொழும்பில் இருந்து வெளியேற்றப்படுவார்களா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர்களின் அண்மைய கூற்றுக்கள் முன்னுக்குப்பின் முரண்பட்டவையாக உள்ளன. ஆனால் எந்த அடிப்படையிலும் தமிழ் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்றுவதற்கு இடமளிக்க மாட்டோம்.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகள் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் வடக்கில் இருந்து வெளியேற்றினார்கள் என்ற காரணத்திற்காக கொழும்பில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்ற முயற்சிப்பது நியாயமற்றது.

விடுதலைப் புலிகளைப் போன்று அரசாங்கத்தால் செயற்பட முடியாது. காரணம் அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அமைப்பாகும். இன மற்றும் மத அடிப்படையில் எவரையும் எந்தப் பகுதியில் இருந் தும் வெளியேற்ற முடியாது. யுத்தம் ஒன்று நாட்டில் நிலவுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் தமிழ் மக்களை வெளியேற்றுவ தன் மூலம் யுத்தத்திற்கோ இனப் பிரச்சினைக்கோ தீர்வு காணமுடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

**வட்டு – தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய மஹோற்சவம் சப்பறத் திருவிழா**



**வளமாக வாழ வரமருள் தாயே**

நாளும் பொழுதும்
போர் எனும் அரக்கனால்
பொலிவிழக்கும் நாம்- எம் மனையில்
வளமாக வாழ்வதற்கு
வரைவிலா வரமதை
ஈர்ந்தருளி உவகையுடன் - நாமும்
உலகினில் வாழ்ந்திட
வரமருள் தாயே

ஸ்ரீ.சஞ்ஜீவன்

## மஹோற்சவம்

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும். யூலை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும், 14ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் பிற்பகல் 2மணிக்கு கொடியிறக்கமும் நடை பெறும்.

கும்பாபிஷேக தினமான (ஆனி–அனுசம்) இம் மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7மணிக்கு விஷேட அபிஷேகம் நடைபெற்று மாலை பஞ்சமூர்த்திகள் வீதி உலா வருவார்கள். யூலை 17ஆம் திகதி தொடக்கம் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**இரண்டாம் திருவிழா**

### தாங்கிக் கொள்ளவாராயோ?

அலைகடல் நடுவினிலே
அழகான கோயிலம்மா
விலை கொடுத்து வாங்கலாமோ
வித்தகியே உன்னையம்மா!

விழாக் கோலம் கொண்டவளே!
மழையாய் அருள் பொழியாயோ!
தாளாத்துயர் மூழ்கு மெம்மைத்
தாங்கிக் கொள்ள வாராயோ!

திருமதி ஜெ.கந்தவேள்
கொக்குவில் கிழக்கு.

### தோசம் போக்கும்

திடமிகுந்த கல்லாய் மாறி
கருட நாக சிறப்பை பெற்ற!
கடல் சூழ்ந்த நயினா தீவில்
குடிகொண்ட நாக பூசணி!
இடர் நீங்க நின்னை நாடி தோசம்
போக்கும் அடியவர்க்கு - போகும்
இடமெல்லாம் சிறப்பை தருவாய்.
அன்னை ஸ்ரீ நாக பூசணி !!

இராமஜெயபாலன்
கொக்குவில்

### அருள் ஒளியாய் நீயிருக்க

நந்தமிழர் மனம் வாழும்
நயினை நாகபூசணி அம்மா
முந்து அருள்மிகு ஒளியாய்
முன்னே நீயிருக்கையில்
செந்தமிழர் மனமெல்லாம்
சோர்ந்து அழிந்து போவதோ
வந்து கரம் கொடுப்பாய்
வேண்டும் சமாதானம் மலரவே

சந்தியாபாலா
அல்லைப்பிட்டி-3

### நல்வாழ்வு தந்திடுவாய் நாகபூசணி

நயினையிலே வீற்றிருக்கும் நாகபூசணி
நாடிவந்தோர் குறை தீர்ப்பாய் நாகபூசணி
பெருமைபல கொண்டவளே நாகபூசணி
அவதாரம் கொண்டவளே நாகபூசணி
தேடிவந்தோர் குறைதீர்ப்பாய் நாகபூசணி
நாகத்திலே அமர்ந்தவளே நாகபூசணி
நல்வாழ்வு தந்திடுவாய் நாகபூசணி
பாமாலை சூடுகின்றேன் நாகபூசணி

வி.டினேஸ்கரன்
வல்வெட்டித்துறை.

### காவல் செய்து ஆளவேண்டும் நாகபூசணி

நயினை நகர் உறைபவளே நாகபூசணி
நலமுடனே வாழ அருள்பவளே நாகபூசணி
வியந்திடும் அற்புதம் நிறைந்தவனே நாகபூசணி
விடிவதனை தந்திடம்மா நாகபூசணி
பயம் போக்கும் நாயகியே நாகபூசணி
பக்த ரெம்மைக் காத்திடம்மா நாகபூசணி
கரம் குவித்து வழிபட்டு வேண்டுகிறோம் நாகபூசணி
காவல் செய்து எம்மை ஆளவேண்டும் நாகபூசணி

செல்வி அ.கலாநிதி
திருநெல்வேலி

### அன்னையே அடிபணிந்தோம்

அன்னையே அடிபணிந்தோம் அருள்புரிவாய் அம்மா!
அம்பிகையே தாயே அமுதசுரபியே தேவியே சரணம் !
உன்னையே சரணமென்று ஓடியே வந்தோமம்மா !
ஓங்காரத்துட் பொருளாய் ஒளிர்கின்ற தாயே போற்றி !
என்னையே ரட்சிக்க ஏன் இன்னும் தாமதமோ?
ஏழையெமக்கருள எழுந்தோடி வாராய் அம்மா !
நின்னையே கதியென்று நித்தமுன்றன் தாள் பணிந்தோம்
அகிலாண்ட நாயகியே ஆரமுதே எமைக் காத்திடம்மா!

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார்கோயிலடி

## இன்று ஒரு தகவல்

# நட்புக்கு யோசனைகள்

ஒருவர் முகத்தை 'உம்'என்று வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"யார் என்னைப் பார்த்தாலும் உடனே முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுகிறார்கள் சார் "என்றார்.

"உங்களுடன் பிரியமாகப் பேசுகிற நண்பர்களே கிடையாதா...?" என்று கேட்டேன்.

"அப்படியாரும் இல்லையே..." என்றார்.

"அதிகமாக நமக்கு நண்பர்கள் கிடைக்க வேண்டுமென்றால் அதற்கென சில உத்திகள் இருப்பதாக அமெரிக்க எழுத்தாளர் டேல் கார்னகி என்பவர் சொல்லியிருக்கிறார் " என்றேன்.

அதை எனக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடுங்களேன்... என்று ஆர்வமாகக் கேட்டார்.

முதல் குறிப்பு:

எதிரிலே உள்ளவர்கள் நிறையப்பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். நம்மைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கக் கூடாது...

அவர் பேசுகிற விஷயம் எதுவாக இருந்தாலும் ஆமாம்!... நல்லது...! என்று ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது...கூடுமானவரை யாருடனும் அனாவசியமாக வாதம் பண்ணக்கூடாது...

மூன்றாவது எந்தப் பிரச்சினையையும் அடுத்தவர் கண்ணோட்டத்திலே பார்க்க வேண்டும்.

எப்பொழுதும் அடுத்தவர்கள் மனோபாவத்தை நாம் புரிந்து வைத்திருந்தால் நம்மை யாராலும் வெல்ல முடியாது...

நாலாவது... ஒருவரிடம் பேச ஆரம்பிக்கும் பொழுது இயல்பாக, அன்பாக ஆரம்பிக்க வேண்டும்.

உதாரணத்துக்கு... உங்களுக்கு இந்தச் சட்டை மிகப் பொருத்தமாக இருக்கிறதே...என்று ஆரம்பிக்கலாம். அதை விட்டுவிட்டு "அன்று என்னை அப்படியே விட்டு விட்டு மறைந்து விட்டீர்களே..."என்று ஆரம்பிக்கக் கூடாது.

ஐந்தாவது... நமது தவறுகளை தயக்கமில்லாமல் ஒத்துக் கொள்ள வேண்டும். அதற்காக கூச்சப்படக்கூடாது.

ஆறாவது, அடுத்தவர்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். நீங்கள் சொல்வது தப்பு என்று முகத்திலே அடித்தால் போல் பேசக்கூடாது.

ஏழாவது விஷயம் என்னவென்றால்... சிலர் எப்பொழுது பார்த்தாலும் சவால் விட்டுக்கொண்டே இருப்பார்கள்... அநாவசியமாக சவால் விடக்கூடாது....

எட்டாவது நம்முடைய கருத்து எதுவோ அதை எதிராளியின் வாயிலிருந்து வரவழைக்கவேண்டும்... அப்படி வரவழைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்...

ஒன்பதாவது, நமது யோசனையை புதிய முறையிலே சொல்லிப் பார்க்கலாம்...அடுத்தவர்கள் சொல்லும் யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த யோசனை மகா மோசமாக இருந்தாலும் கூட அதை ஏற்றுக்கொள்கிற மாதிரி நடிக்கலாமாம்!

பத்தாவது குறிப்பு... மிக முக்கியமானது. அதாவது - அநாவசியமாகப் பொய் சொல்லக் கூடாது. அப்படி எப்பொழுதாவது பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பெரிய பொய்யாகச் சொல்ல வேண்டுமாம்! அதை நம்பும் படியாகச் சொல்ல வேண்டுமாம். சில சமயம் தேவைப்பட்டால் பொய்யை உண்மையாக மாற்றிக் கொள்ளலாம்.

அது எப்படி?... எனக்குக் கார் ஓட்டத் தெரியும் என்று நண்பர்களிடம் பொய் சொல்லியாகிவிட்டது. நண்பர்கள் உண்மையாகவே ஒரு காரைக் கொடுத்து ஓட்டு என்று சொல்வதற்கு முன்னால் ஏதாவது ஒரு டிரைவிங் ஸ்கூலிலே சேர்த்து கார் ஓட்டக் கற்றுக் கொள்ளலாம்.

இது மாதிரி பொய்யை உண்மையாக்கிக் கூட சில பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம்!

பதினோராவது குறிப்பு... உயர்ந்த நோக்கங்களை மட்டும் வெளியிலே பேசவேண்டும். உள்மனம் எவ்வளவு ஒட்டடை படிந்து கிடந்தாலும் பரவாயில்லையாம்!

பன்னிரெண்டாவது குறிப்பு - சிறந்த, நல்ல நண்பர்களைத் தேடித்தான் பெறவேண்டியிருக்கும். அவ்வளவு சுலபமாகக் கிடைக்கமாட்டார்கள்.

இவ்வளவு குறிப்புகளையும் அந்த அமெரிக்க எழுத்தாளர் சொல்லியிருக்கிறார். இப்படி நடந்து கொண்டால் நமக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்களாம்...முயற்சித்து பார்க்கலாம்.

இந்தக் காலத்திலே எத்தனையோ விதமான நண்பர்கள் உண்டு.

ஒருவர் மிகவும் கவலையோடு நின்று கொண்டிருந்தார். கண் கலங்கியிருந்தது... "ஏன் இப்படிக் கவலையோடு நின்று கொண்டிருக்கிறீர் கள்?"என்று கேட்டேன்.

என்னுடைய நண்பன் ஒருவன்...ஒருநாள் கோபத்திலே என்னைப் பார்த்து ... "உன்னோடு ஒரு வருஷத்துக்குப் பேச மாட்டேன்...போ... என்று சபதம் போட்டு விட்டான்" என்றான்.

"அதற்காகவா இப்படிக் கவலைப்படுகிறீர்கள்...?" என்று கேட்டேன்...அதற்கு அவர்... "நான் அதற்காகக் கவலைப்படவில்லை...அந்த ஒரு வருஷக் கெடு இன்றுடன் முடிவடைகிறது...அதை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது..." என்றார் சோகமாக!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைக்கப்படுவது உறுதி

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மூன்றாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்படும். சாத்தியம் உள்ளது. இம்மாதம் 30ஆம் திகதி தேர்தல் நடைபெற வேண்டும்.

ஆனால் தேர்தலுக்கான ஏற்பாடுகள் எதுவும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில் தேர்தல் ஒத்திவைக்கப்படுவது உறுதி என மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் கடந்த வருடம் மார்ச் 30ஆம் திகதி நடைபெற்றன. எனினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து அவற்றுக்கான தேர்தல் செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிலைமை சீரடையவில்லை என மீண்டும் தெரிவத்தாட்சி அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து இரண்டாவது தடவையாகவும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. எனினும் தேர்தலுக்கான அறிவிப்பு இன்னமும் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படாமையால் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படுவது உறுதியாகிவிட்டது.

குறித்த திகதிக்கு இன்னும் ஒரு சில நாட்களே உள்ளன. இதே வேளை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 30ம் திக திக்கு ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்தக் கூடிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளனர். தற்போதைய நிலையில் மேற்படி தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# க.பொ.த (சா/த)ப் பரீட்சை -டிசம்பர் 2007

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை 2007 க்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்தினம் 2007 யூலை 13ஆம் திகதியாகும். தமது விண்ணப்படிவங்களைப்பூர்த்தி செய்வதற்கு முன்பதாகச் சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கி அதன் படி விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த வேண்டும்.

விண்ணப்படிவத்தில் பாட எண்ணை குறிப்பிடும் போது சரியான பாட எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை கவனிக்கவேண்டும்.

***2. பாடசாலை விண்ணப்பங்கள்:-***

இதற்கு முன் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு மாணவர்களை தோற்றச்செய்த சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு இவ் விண்ணப்பப்படிவங்களை 2007.06.19 ம் திகதிக்கு முன் கிடைக்கும் வண்ணம் அஞ்சலில் அனுப்புவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அதுவரை விண்ணப்படிவங்கள் கிடைக்கப் பெறாதா பாடசாலைகள் இருப்பின் தாமதமின்றி இத்திணைக்களத்தின் பாடசாலை பரீட்சைகள் ஒழுங்குபடுத்தற்கிளைக்கு அறிவிக்கவேண்டும்.

*பாடசாலையில் இருந்து விலகிய விண்ணப் பதாரிகள் மட்டுமே தனிப்பட்ட பரீட்சாத்திகளாக தோற்றமுடியும். பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்கும் பரீட்சாத்திகள் பரீட்சை தடைக்கு உற்படுத்தப்படுவர்.*

***3. தனிப்பட்ட பரீட்சார்த்திகள்:-***

அரசினர் பாடசாலைகளில், கட்டணம் அறவிடப்படாத அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில், அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்களில் கற்றுக்கொண்டிரா எவரும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்கமுடியும். இப்பரீட்சைக்காக தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் 2007யூலை மாதம் 13ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

4.பரீட்சைக்குத்தோற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிடத்துக்கு கிட்டிய நகரத்தை தெரிவு செய்தல் வேணடும்.

5.இவ்அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பபடிவங்கள் பரீட்சாத்தியினால் தயாரிக்கப்படல் வேண்டும் .

6. விண்ணப்பப்படிவங்கள் 28 x21 செ.மீற்றர் அளவு தாளில் தயாரிக்கப்படுவதுடன் 1முதல் 13 வரையான கூடுகள் முதற்பக்கத்திலும் 14 முதல் 15 வரையான கூடுகள் மறுபக்கத்திலும் அமையத்தக்கதாக விண்ணப்பபடிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

7.பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்புக்கிளை, இலங்கை பரீட்சைத்திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "க.பொ.த (சா /த) ப் பரீட்சை டிசம்பர் 2007 நகர எண்........ " எனக் குறிப்பிடவும்.

8. ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தித் தன்மை அல்லது பரீட்சையின் பின்னர் வெளியிடப்படும் முழுபெறு பேறுகளும் முற்றாக இரத்துச் செய்யப்படும் என்பதை யும் கவனத்தில் கொள்ளவேண்டும்.அத்தோடு நீண்டகாலம் பரீட்சைக்குத்தோற்றுவதற்கான தடைக்கும் உட்படுத்தப்படும் . ஒரு உறையினுள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் இடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுவதுடன் அதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கடைப்பிடிக்கவேண்டும்.

9.இதன் பொருட்டு பிறரால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பயன்படுத்திக்கொள்வதாயின் இவ்வறி வித்தலின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பாட எண்களையும் நகர எண்களையும் மட்டும் கவனத்தில் கொண்டு அவ்விபரங்களைச் சரியாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்படிவத்தை அஞ்சலில் இடுவதற்கு முன் அதனை வாசித்து சரி பார்த்து அதிலுள்ள இலக்கங்கள் மற்றும் விபரங்கள் யாவும் அறிவித்தலில் கூறப்பட்டுள்ளபடி பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும் .

***10. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்:-***

விண்ணப்பதாரிகள் பரீட்சை எழுதுவதற்கு பரீட்சை மண்டபத்திற்கு வரும் எல்லா வேளைகளிலும் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பின்வரும் அடையாள அட்டைகளில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை.

ஆ.செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)

***11. பரீட்சைக்கட்டணம்:-***

அரசினர் பாடசாலைகள் , கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகள், அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்கள் ஆகியவற்றில் இருந்து பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் தவிர்ந்த ஏனைய எல்லா விண்ணப்பதாரர்களும் உரிய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

அஞ்சல் அலுவலகத்தில் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவேண்டும்.கட்டணம் செலுத்திப்பெற்ற பற்றுச் சீட்டை விண்ணப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்பவும். அதன் பிரதி ஒன்றையும் விண்ணப்பப்படிவம் பதிவு அஞ்சல் செய்த பற்றுச்சீட்டையும் விண்ணதாரி தன்னிடம் வைத்துக் கொள்ளவேண்டும்.

*முக்கிய கவனத்திற்கு*

அ.இப் பரீட்சைகென செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ பகுதியாகவோ மீளளிக்கப்படவோ வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ மாட்டாது.

ஆ.விண்ணப்படிவத்தை அனுப்பிய பின் பாட எண்ணையோ நகர எண்ணையோ மாற்றம் செய்யமுடியாது.

இ. விண்ணப்பப்படிவம் கோரப்படும் கடைசித்திகதிக்குப் பின் அஞ்சல் அலுவலகங்களில் பணம் செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்களும் கடைசித்தினத்திற்குப்பின் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும்.

# இராசிபலன்

*17.06.2007*

*ஆனி 3, ஞாயிற்றுக்கிழமை*
*துதியை முற்பகல் 5.52 மணிவரை*
*புனர்பூசம் முன்னிரவு 09.07 மணிவரை*
*இராகுகாலம் 04.23-05.53 மணிவரை*
*சுபநேரம் 08.53-10.23 மணிவரை*
*சித்தம்*

**மேடம்:-** *மனந்தளர்வு, ரோகநிலை, தொழில்ஆர்வம், முயற்சி தாமதம்.*

**இடபம்:-** *சகோதுரர்உதவி, நற்கீர்த்தி, காரிய அனுகூலம், தேகநலன்.*

**மிதுனம்:-** *போசன சுகக்குறைவு, வீண்செலவு, எடுத்த கருமம் தாமதமாகும், விவாதம்.*

**கடகம்:-** *சயனசுகம், தெளிந்த சிந்தை, புதிய முயற்சி, வெகுமானம்.*

**சிங்கம்:-** *காரிய அலைச்சல், சிந்தனை மிகுதி, தன விரயம், பிறருக்கு உதவுதல்.*

**கன்னி:-** *குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம்.*

**துலாம்:-** *பெரியோரால் மதிக்கப்படுதல், எடுத்த காரியம் கைகூடும், அதிகாரம், நன்கொடை.*

**விருச்சிகம்:-** *சரீரப்பிரயாசை, வீண்பயம், முயற்சி தாமதம், அஜீரணக்கோளாறு.*

**தனுசு:-** *வாகன பயம், பொருள் விரயம், காரிய தடங்கல், அமைதிக்குறைவு.*

**மகரம்:-** *மனோதைரியம், பெருமையடைதல், தொழில் நன்மை, தெய்வசிந்தை.*

**கும்பம்:-** *சத்துரு ஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துபசாரம், ஆனந்தம்.*

**மீனம்:-** *காரியஇடையூறு, தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, போசன சுகம்.*

-வளவன்

நடத்தை என்பது ஒரு கண்ணாடி அதில் ஒவ்வொருவரும் தனது பிம்பத்தை காட்டுகிறார்.

-சாக்கிரட்டீஸ்

வலம்புரி

# போர் முரசம் கேட்கிறது போர்க்கொடிகள் அசைகின்றன

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணும் எண்ணம் அரசுக்கு அறவே இல்லை என்பது தெளிவாகின்றது.

மிகப்பெரிய யுத்தத்தை நடத்துவதில் அரசு காட்டும் அதீத அக்கறை இந் நாட்டில் பேரழிவை ஏற்படுத்தப் போகின்றது என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ,யுத்தத்தை நடத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்.

அவரின் விருப்பத்தை நிறைவு செய்வதில் படைத் தளபதிகள் முனைப்புக்காட்டி வருகின்றனர்.

இந் நிலையில் விடுதலைப்புலிகளின் பலத்தை ஒடுக்குவதற்கு மூன்று வருடகால அவகாசத்தை கோத்தபாய ராஜபக்ஷ படைத் தளபதிகளுக்கு வழங்கியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் போரிட்டு வெல்ல முடியாதென பிரிட்டிஷ் பிரதமர் உள்ளிடப் பலரும் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் ஆலோசனை வழங்கியிருந்தும் யுத்தத்தை தொடருவதிலேயே அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

சுருங்கக்கூறின் பாரதப்போர் மூள்வதற்கு முன்னதாக,துரியோதனனை சந்தித்த பிரதானிகள் போர் மூண்டால் அழிவு நிச்சயம். எனவே போர் மூளாமல் பார்த்துக்கொள்ளுமாறு ஆலோசனை கூறினர்.

எனினும் அழிவின் காலம் நெருங்கியதால் போர் வேண்டாமென யார் யாரெல்லாம் கூறினார்களோ அவர்களையெல்லாம் துரியோதனன் வெறுப்புடனேயே நோக்கினான்.

மாறாக போருக்கு யார் எல்லாம் ஆதரவாகப் பேசினார்களோ அவர்களை தனது நட்பாக்கிக் கொண்டான்.

அறிஞர்கள், இராஜதந்திரிகள் எனப்பலரும், போர் வேண்டாம் எனக் கூறியும் போரை யாராலும் தடுத்துவிட முடியவில்லை.

இதுபோன்ற நிலையையே இலங்கையிலும் காண்கின்றோம். போர் வேண்டாமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு உலக நாடுகள் எடுத்துக் கூறியும் அதனை செவி சாய்க்க முடியாதவராக அவர் உள்ளார்.

போரை நிறுத்தி ,சமாதான பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்பினாலும் சகோதரன் கோத்தபாய விடுவதாக இல்லை.

மூன்று வருடங்களுக்குள் விடுதலைப்புலிகளை ஒடுக்கி விடுகின்றேன் என சபதம் எடுத்திருக்கின்றார்.

திருதராட்டிரனின் நிலைமையில் இப்போது ஜனாதிபதி மகிந்த இருக்கின்றார். அங்கு மகன் துரியோதனன் யுத்தத்தை விரும்பியதால் தந்தை திருதராட்டிரனினால் எதுவும் செய்ய முடியவில்லை.

அது போன்று இங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சகோதரன், அதுவும் குண்டு வெடிப்பில் தப்பி போர் புரிவேன்;புலிகளை அடக்குவேன் என்ற சபதத்தில் சீற்றம் கொண்டிருக்கும் சகோதரன்.

தடுக்கவும் தட்டிச்சொல்லவும் முடியாத நிலையில் போர் முரசங்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. கோடை காலத்திற்குள் போர் தொடங்கும் மழை காலத்திற்குள் யுத்தம் முடிபுக்கு வந்து விடும்.

வடக்குக் கிழக்கை பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடுவோம் என்ற வீர வாசகங்கள் காற்றில் அரசின் போர்க்கொடிகளாக அசைகின்றன.

மறுபுறத்தில் விடுதலைப்புலிகளும் போர் என்றால் போர் என்ற சபதத்தோடு காத்திருக்கின்றனர். முடிபு யுத்தம் என்பது உறுதியாகிவிட்டது.

# ரணிலின் தேசத்துரோகத்தை முறியடிக்க வெளிநாட்டு தூதுவர்களை சந்திப்போம்

## ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் ஜாதிக ஹெல உறுமய விரைவில் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் ஹெல உறுமயவின் தூதுக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர். ரணில் விக்கிரமசிங்காவின் பிரசாரங்களை தோற்கடிப்பதற்காக முழு மூச்சுடன் செயற்படுவோம் என்று ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார். வெளிநாட்டு சக்திகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை வீழ்த்த முயற்சிக்கின்றார்.

குறுக்கு வழியில் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றார். வெளிநாடுகள் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை மேற்கொள்வதற்கான சூழலை ரணில் உருவாக்கி வருகிறார். ரணிலின் இவ்வாறான தேசத்துரோக செயற்பாட்டைத் தோற்கடித்து மகிந்த சிந்தனையை பலப்படுத்தும் பொறுப்பு எமக்கு இருக்கிறது.

எமது நாட்டைக் காட்டிக்கொடுக்கவோ நாட்டுக்கு பங்கம் விளைவிக்கவோ எவருக்கும் இடமளிக்கமுடியாது. அந்த வகையில் ஹெல உறுமய விரைவில் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்காவின் பொய்ப்பிரசாரம் குறித்து விளக்கமளிக்கவுள்ளோம். அதேவேளை அடுத்த மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். அந் நாடுகளுக்கு விஜயம்செய்து எமது நாட்டின் உண்மை நிலைவரம் குறித்து விளக்கமளிப்போம்.

ரணில் விக்கிரமசிங்காவின் பொய்ப்பிரசாரங்களை நம்ப வேண்டாம் என்று வலியுறுத்துவோம். கடந்த வாரம் நாங்கள் யப்பானின் இலங்கைக்கான ,விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி மற்றும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கிம் ஹொவெல்ஸ் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளோம் என்றார்.

(ந-5)

# வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு கோத்தபாயவுடன் தளபதிகள் விஜயம்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சிரேஷ்ட படைத்தளபதிகளும் வடக்கு கிழக்கிற்கு அவசர பயணங்களை மேற்கொண்டுள்ளார். கடந்த புதன்கிழமை யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி சரத்பொன்சேகா அங்குள்ள நிலைமைகள் குறித்து மாவட்ட தளபதிகளுடனும், களமுனைத் தளபதிகளுடனும் ஆராய்ந்திருந்தமை தெரிந்ததே.

இதையடுத்து கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் கடந்த வியாழக்கிழமை சிரேஷ்ட படை அதிகாரிகள் வவுனியாவிற்கும் கிழக்கிற்கும் சென்றிருந்தனர். கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் அங்கு சென்றிருந்தனர்.வடக்கு மற்றும் கிழக்கு பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக இவர்கள் ஆராய்ந்ததுடன் மாவட்ட தளபதிகள் மற்றும் களமுனைத் தளபதிகளையும் சந்தித்து நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்தனர். கிழக்கில் குடும்பிமலைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் வவுனியாவுக்கு மேற்கே தொடர்ந்தும் மோதல் நிலை இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(ந-5)

# சம்பூர், மூதூர் கிழக்கு அதிஉயர் பாதுகாப்பு வலயம்

(மட்டக்களப்பு)

திருகோணமலை சம்பூர் மற்றும் மூதூர் கிழக்கு ஆகியவற்றை அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் வேறு பகுதியில் குடியமர்த்தப் படவுள்ளனர்.

இருப்பினும் அப் பகுதியில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)

# இலங்கை அரசுக்கு எதிராக கண்டனத்தீர்மானம் முன்வரும்

## நெதர்லாந்து பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

நெதர்லாந்து உத்ரெக் மாநிலத்தில் கடந்த 14 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் மீறல் தொடர்பாக நெதர்லாந்து தொழிற் கட்சிகளின் கூட்டம் இடம் பெற்றது. இக் கூட்டத் தொடரில் பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் முக்கிய பிரதிநிதிகளுடன் அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய கூட்டத் தொடரின்போது இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை கண்டித்து அங்கு உரையாற்றிய நெதர்லாந்தின் தொழில் கட்சி,சோசலிசக் கட்சித் தலைவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமை அமைப்பு அங்கத்தவருமான மாக்ஸ் வன் டென் பேர்க்கும் கலந்து கொண்டார்.

இந்த கூட்டத்தில் ஈழத்தமிழர்களின் சார்பில் கலந்து கொண்ட நெதர்லாந்து தமிழர் மனித உரிமை மையத்தின் பொறுப்பாளர் இந்திரன் சின்னையா மற்றும் நெதர்லாந்தவரான தமிழீழ ஆதரவாளர் அனா பெர்சைல் ஆகியோர் இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், அவர்களுக்கு எதிராக தொடரும் கொலைப் பயமுறுத்தல்கள் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் இடம் பெயர்ந்த அவல வாழ்க்கை, யாழ்.மக்களின் திறந்த வெளிச் சிறைச்சாலை வாழ்க்கை,அண்மையில் கொழும்பில் தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை,பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஐரோப்பிய ,பிரித்தானிய,அமெரிக்க நாடுகளின் உதவிகள் எமக்குத் தேவையில்லை என்ற அறிக்கை என்பனவற்றை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டி ஒரு விரிவான அறிக்கையினை மாக்ஸ் வன் டென் பேர்க்கிடம் சமர்ப்பித்தனர்.

இங்கு உரையாற்றிய மாக்ஸ் வன் டென் பேர்க் இலங்கை அரசுக்கு எதிராக கண்டனத்தீர்மானம் நிறைவேற்ற தமது கட்சி முயற்சி எடுத்துள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய கூட்டம் இடம் பெறும் என்றும் உறுதியளித்தார்.அதற்கு அங்கு கலந்து கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகளால் அவருக்கு விசேடமாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

(ந-5)

## ★வீதியில் இறங்கிப் போராடுவோம்★பாகிஸ்தானிடம் முறையிடுவோம்

# முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசுக்கு இருவாரகால அவகாசம்

## எதிர்க்கட்சி முஸ்லிம் எம்.பிக்கள் ஆவேசம்

முஸ்லிம் மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு அரசாங்கத்திற்கு இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்குகின்றோம். அந்த காலப் பகுதியில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் நாங்கள் சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை எடுப்போம்.கொழும்பில் உள்ள வெளிநாட்டுத்தூதரகங்களுக்கு இந்த விடயம் தொடர்பாக அறிவிப்பதுடன் இலங்கைக்கு உதவி வழங்கும்நாடுகளிடமும் முறையிடுவோம். விரைவில் நாட்டின் அனைத்து இன மக்களின் உரிமைகளையும் வென்றெடுப்பதற்காக வீதியில் இறங்கிப் போராடுவோம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காத அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் உடனடியாக பதவி விலகவேண்டும். தேர்தல் காலங்களில் மட்டுமே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் கட்சியாக செயற்படுகின்றது. ஏனைய காலங்களில் முஸ்லிம் மக்கள் மறக்கடிக்கப்படுகின்றனர் என்று முஸ்லிம் எம். பிக்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் முஸ்லிம் எம்.பிக்களான கபீர் ஹாஷிம் , அப்துல் காதர் மற்றும் எம்.மஹரூப் ஆகியோர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த கபீர் ஹாஷிம் எம்.பி. மேலும் கூறுகையில், இந்த நாட்டில் தற்போது முஸ்லிம் மக்கள் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர். முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்படுகின்றனர். வர்த்தகர்களிடம் கப்பம் பெறப்பட்டு வருகின்றது. முஸ்லிம் வர்த்தகர்கள் அச்சுறுத்தப்படும் சம்பவங்களுக்குப் பின்னால் பாரிய குழு ஒன்று இயங்குகின்றது. ஆனால் இவற்றைத் தடுக்க அரசாங்கம் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வில்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் அமைச்சர்கள் இதுவரை முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக கலந்துரையாடவில்லை. அத்துடன் ஜனாதிபதியுடன் இவ் விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தவும் இல்லை. நாங்கள் முஸ்லிம் சமூகம் உட்பட அனைத்து இன மக்களினதும் உரிமைகளுக்காக குரல் கொடுப்போம். முஸ்லிம் எம்.பிக்கள் என்ற வகையில் சிங்கள மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டே நாங்கள் பாராளுமன்றம் வந்துள்ளோம்.

அரசாங்கம் உடனடியாக முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் இதற்காக அரசாங்கத்திற்குஇரண்டு வார கால அவகாசம் வழங் குகின்றோம்.இரண்டு வாரங்களில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படா விட்டால் மக்களை இணைத்துக் கொண்டு வீதியில் இறங்கிப் போராடுவோம். சர்வதேச நாடுகளிடம் முறையிடுவோம். முக்கியமாக இலங்கைக்கு உதவி வழங்கும் முஸ்லிம் நாடுகளி டம் முறையிடுவோம். பாகிஸ்தான் இலங்கைக்கு அதிகளவில் ஆயுதங்களை வழங்கி வரும் நாடாகும் என்பதனை நினைவூட்டுகின்றோம் என்றார்.

(ந)

# மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேசம் அவதானமாகவுள்ளது

## வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பு குறித்து ரவி கருணாநாயக்க



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து சர்வதேச சமூகம் கடும்அதிருப்தியில் உள்ளது. அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன. சர்வதேசத்தின் பார்வையில் இலங்கை தோல்வியடைந்த நாடாகவிருக்கின்றது.

வெளிநாட்டுத் தூதுவர்களுடன் உரையாடும் போது இதனை உணரமுடிந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நாடாளுமன்றக் குழுவினர் கடந்த புதன்கிழமை இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசினர்.

இங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து ரவி கருணாநாயக்க எம்.பி. கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை நாங்கள் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்துப் பேசுவது வழக்கமாகும். இந்த நாட்டின் உண்மையான நிலைமையை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு மறைத்து வருகின்றது.

இந்நிலையில் நாட்டின் யதார்த்த நிலைமையை வெளிநாடுகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய எமது கடமையாகும். அந்த வகையில் நாங்கள் கடந்த புதன்கிழமை வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசினோம்.

அமெரிக்கா, ஜேர்மன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் உட்பட 36 இராஜதந்திரிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். அவர்களுடன் நாங்கள் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து விரிவாகக் கலந்துரையாடினோம்.

நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்துத் தூதுவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டனர். மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகம் மிகவும் அதிருப்தியிலும் அதேவேளை அவதானமாகவும் இருப்பதாகத் தூதுவர்கள் குறிப்பிட்டனர்.

சர்வதேச நாடுகளின் பார்வையில் இலங்கை தோல்வியடைந்த நாடாகவிருக்கின்றது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏன் தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கவில்லை என்று அமெரிக்கத் தூதுவர் எம்மிடம் வினாவினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகளின் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தயாரித்துள்ள தீர்வு யோசனைக்கு நாங்கள் முழுமையான இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளோம் என்றும் அதனால் தனிப்பட்ட தீர்வு யோசனையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் நாங்கள் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினோம்.

மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வரும் ஜனநாயக செயற்பாடுகளை வெளிநாட்டுத் தூதுவர்கள் வரவேற்றனர். அத்துடன் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் குறித்து கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார் என்றார். (ந-5)

## வவுனியாவில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் பகுதியிலிருந்து நேற்று சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அப்பகுதி கிராம சேவகர் வழங்கிய தகவலினையடுத்து இச் சடலம் மீட்கப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள், இந்நபரை சுட்டுக் கொன்றுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய முஸ்லிம் ஒருவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் இச் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-3)

## பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இருவர் நேற்றுச் சுட்டுக்கொலை

கம்பஹா உடுகம்பொலப் பிரதேசத் தின் கொட்டுகொட வீதியில் பாதாள உலகக் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகக் கம்பஹா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் குழுவினரைக் கைது செய்யப் பொலிஸார் சென்றபோது பொலிஸார் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கிகள் இரண்டும் கைத் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக கம்பஹாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட இருவரும் பியகம மற்றும் மினுவாங்கொடப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## கொழும்பு நகரில் விசேட சோதனை

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்றுப் படையினரும் பொலிஸாரும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இச் சோதனை நடவடிக்கை சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்றுள்ளது.

கொழும்பு நகருக்குள் உட்பிரவேசிக்கும் பிரதான வீதிகள் உட்பட பல வீதிகளில் இச் சோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதன்காரணமாக வாகன நெருக்கடி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இச்சோதனை நடவடிக்கையின் போது கைதானவர்களின் விபரம் தெரியவரவில்லை. (ந-3)

## அதிபர் சேவை நேர்முகப் பரீட்சைக்கு...

நடத்தப்பட்ட பின் அதன் முடிபுகள் தனித்தனியாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது வழக்கம்.

இந் நடைமுறை இலங்கை அதிபர் சேவைக்காக தற்போது நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் பின்பற்றப்படவில்லை. இதனால் கல்வி அதிகாரிகளின் செல்வாக்கும் அரசியல்வாதிகளின் செல்வாக்கும் அதிகரித்து தகுதியானவர்கள் பின்தள்ளப்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை நாடளாவிய சேவையாகும். இதற்கு மாகாணக் கல்வி அமைச்சு மட்டத்தில் நேர்முகப் பரீட்சை நடத்த அனுமதித்திருப்பதன் மூலம் ஊழல் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## வாகரை இளைஞர்கள் கையெழுத்திட வேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் பொதுமக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட போதும் அங்குள்ள இளைஞர்கள் அனைவரும் குடியிருப்புக்களுக்கு அருகில் உள்ள படை முகாம்களுக்கு வாராவாரம் சென்று கையெழுத்திட வேண்டும்என படையினர் உத்தரவிட்டுள்ளனர். (ந-5)

## தமிழர்கள்...

வெளியேற்றம் என்பது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல என்றும் கடந்த 25 ஆண்டு காலமாகப் போரை அனுமதித்திருக்கும் மதத் தலைவர்கள் அதனைத் தடுக்க இப்போதாவது முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-5)

## பாக்கு நீரிணைப் பகுதியில்...

கடல்ரோந்துகளை அதிகரிப்பது, புதிய ராடர்களை நிறுவுவது, தமிழ் நாட் டுக் கரையோரங்களில் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைப் பொருத்துவது என்பன தொடர்பாக இந்தியாவின் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் சிறப்புக் கூட்டம் ஒன்றைத் தமிழ் நாட்டில் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டம் நடைபெற்ற சில தினங்களில் இந்தியாவின் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத்தளபதி தலைமையில் மற்றுமொரு கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை அரசுக்கு உதவும்பொருட்டு இந்திய மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பலப்படுத்தல்களின் ஓர் அங்கமாக இராமேஸ்வரம் கரையோரங்களில் வான் படையின் 8 ராடர் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 4 புதிய விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இதனிடையே வங்காளவிரிகுடா, பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா போன்ற கடற்

## வவுனியா, மன்னாரில்...

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கு அனுமதி தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து சுமார் 300 பேருக்கு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. இதனை

யல் போராட்டத்தை நிறுத்தியதுடன், பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஐந்து பேர் கொண்ட பிரதிநிதிகள்குழு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தனர்.

இந் நிலையில் வடமாகாணக் கல்வி

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கு அனுமதி தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து சுமார் 300 பேருக்கு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. இதனையடுத்துத் தற்காலிக அனுமதி கிடைக்கப்பெறாத 300 ற்கும் மேற்பட்டோர் யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் இராணுவத்தினர் தலையிட்டு, மறியல் போராட்டத்தை நிறுத்தியதுடன், பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஐந்து பேர் கொண்ட பிரதிநிதிகள்குழு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தனர்.

இந் நிலையில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வவுனியா மற்றும் மன்னார்ப் பகுதிகளில் தற்காலிக நியமனம் வழங்கும் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

இந்தியாவின் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் சிறப்புக் கூட்டம் ஒன்றைத் தமிழ் நாட்டில் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டம் நடைபெற்ற சில தினங்களில் இந்தியாவின் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத்தளபதி தலைமையில் மற்றுமொரு கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

இந்தியாவின் கிழக்குப் பிராந்திய தலைமையகமான அரக்கோணம் பகுதியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாக்குநீரிணையில் மேலதிகமான பீரங்கிக் கப்பல்களை ரோந்தில் ஈடுபடுத்துவது தொடர்பாகக் கிழக்

இந்திய மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பலப்படுத்தல்களின் ஓர் அங்கமாக இராமேஸ்வரம் கரையோரங்களில் வான்படையின் 8 ராடர் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 4 புதிய விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இதனிடையே வங்காளவிரிகுடா, பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா போன்ற கடற்பகுதிகளில்இந்தியா ஆறு போர்க்கப்பல்களை நிறுத்தியுள்ளதுடன் ஆளில்லாத உளவு விமானங்கள் பலவற்றையும் பாக்கு நீரிணையின் மேலாக ரோந்தில் ஈடுபடுத்தி வருகின்றது. (ந-5)

## கோத்தபாயவின் பயணத்திற்கு...

அனைத்துலக விமான நிலையங்களில் கோத்தபாய ராஜபக்ஷவை அனுமதிப்பதில்லை என்ற மேற்குலக நாடுகளின் முடிவுகள் இன்று வரை நிலுவையிலுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் இடம்பெற்ற நேர்காணல் ஒன்றின்போது மேற்குலக நாடுகளைச் சாடியும் கொழும்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றியதையும் மனித உரிமை மீறல்களையும் நியாயப்படுத்தியும் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்களே மேற்குலக நாடுகளின் இந்த நிலைப்பாட்டிற்கு காரணமாகும்.

யார் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டாலும் இலங்கையில் உள்ள தூதரகங்கள் அதனை வரவேற்கப் போவதில்லை. இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளின் விபரங்களை இலங் கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் சேகரித்து வருகின்றன.

அதில் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ணவினால் தெரிவிக்கப்பட்ட அதிகாரிகளின் விபரங்களும் அடங்கியுள்ளன. இலங்கையில் இடம்பெற்று வரும்கடத்தல்களில் தொடர்புடையவர்கள் எனக் கருதப் படுவோரின் தகவல்களை லக்ஷ்மன் செனவிரட்ண அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதனிடையே தமிழ் மக்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றியது மற்றும் கடத்தல்கள் தொடர்பாக அமெரிக்காவிலுள்ள பல பொது அமைப்புக்கள் கோத்தபாய ராஜபக் ஷவுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கோத்தபாய ராஜபக்ஷ அமெ ரிக்காவுக்கு வந்தபின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அமைப்புக்கள் காத்திருப்ப தாகவும் அதற்குரிய சட்ட ஆலோச னைகளைத் தற்போது அவர்கள் பெற்றுவரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## சடலம்...

விஜயகுமார் (வயது-22) என்ற இளம் குடும் பஸ்தருடையது என அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சடலம் உறவினர்களிடம் கொடிகாமம் பொலிஸாரினால்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வியாழக் கிழமை மந்துவிலைச் சேர்ந்த இராஜேந்திரம் கஜன் (வயது-19) என்ற மாணவனின் சடலம் உற வினர்களால் இனங்காட்டப்பட்டமை தெரிந்ததே. (ந-5)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறி 12.06.2007 பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் டிப்ளோமா பட்டம் பெற்ற

தங்கராஜா கௌசலியாவை

மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்;
அப்பா, அம்மா, தங்கை, தம்பி, அண்ணாமார், பெரியம்மா, பெரியப்பா.

அறிவெளி வீதி,
புத்தூர்.

(135)



இப் பத்திரிகை வலம்புரி அன் கோ. ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.